DEPOSITION OF WITNESS

-----

IN THE COURT OF PRINCIPAL JUDGE, CHENNAI

**LAOP 204/2023 - PW1**

Name : S.Karthikeyan Reddy.

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 10th day of December, 2024.

---

**குறுக்கு விசாரணை** :-

பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நில எடுப்பிற்குள்ளான இடம் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் சர்வ சக்தி விநாயகர் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கான இடத்தை எனது தந்தை கோவிலுக்கு தானமாக கொடுத்து விட்டார் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் எஸ்.ராஜேஷ்வரி. அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. அவரது இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் என் வசம் உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் எனது தாயார் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். நான் உட்பட எனது 2 சகோதர்கள் மற்றும் 3 சகோதரிகள் எனது தந்தைக்கு வாரிசுகள் என்றால் சரிதான். அவ்வாறு இருக்க நான் எதன் அடிப்படையில் நான் மட்டும் வாரிசு என்று கூறுகிறேன் என்றால் என் தந்தை காலத்திற்கு பிறகு மேற்படி கோவிலை நான் பராமரித்த வருவதால் என் பெயரை மட்டும்

போட்டுள்ளேன். என் தந்தை வி.கே.சங்கர ரெட்டி 2011 ம் ஆண்டு இறந்து விட்டார். நான் மட்டும்தான் நில எடுப்பிற்குள்ளான சொத்திற்கு உரிமையாளர் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 22/02/2023 ல் அறக்கட்டளை ஏற்படுத்தினோம், அந்த அறக்கட்டளையில் நான் ஆயுட்கால நம்பகர் ஆவேன். நில எடுப்பு சம்பந்தமாக 24/11/2021 ல் பத்திரிக்கைளில் விளம்பரம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நில எடுப்பு சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகளில் நான் எனது தந்தையின் பாகப்பிரிவினை பத்திரத்தையும், மின் இணைப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கொடுத்தேன். அவை போதாது அறக்கட்டளை ஆவணம் வேண்டும் என்று கேட்டதால் 2023 ல் அறக்கட்டளை ஏற்படுத்தினேன். அறக்கட்டளை பத்திரத்தில் பக்கம் 15ல் அறக்கட்டளை சம்பந்தமாக அறக்கட்டளைக்கு அசையா சொத்துகள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில எடுப்பிற்குள்ளான சொத்து வா.சா.ஆ.11 ல் கண்டுள்ள அறக்கட்டளைக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அறக்கட்டளை ஆவணத்தில் என்னை தவிர எங்கள் குடும்பத்தை சார்ந்த வேறு யாரும் நம்பகர்கள் இல்லை என்றால் சரிதான். நில எடுப்பு தேதியில் மனுதாரர் கோவிலுக்கு அங்கீகரிக்கப்பட்ட அறங்காவலர் யாரும் இல்லை என்றால் சரியல்ல. நான்தான் பார்த்து

வந்தேன். இழப்பீட்டு தொகை அரசாங்கத்திற்குதான் சேரும் என்றாலும், அதில் எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. என் தந்தை இடம் கொடுத்திருந்தாலும், கோவில் பொதுமக்கள் பங்கீட்டினால் கட்டப்பட்டது என்பதால் நான் தனிப்பட்ட முறையில் உரிமை கோரமுடியாது என்றால் சரிதான். பொதுமக்கள் கேட்டுக்கொண்டால் அரசு கோவில் கட்டிக்கொடுக்க கடமை பட்டுள்ளது என்றாலும் தனிநபருக்கு அதில் உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. என் தந்தை இறந்த பிறகு மனுதார் கோவிலை நான் நிர்வகித்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |